# காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி

கலைமகன்


ஓவியம்: ஜே.கே.

ஆதலினால் காதல் செய்வீர், உலகத் தீரே!
என்று பாரதி கோரினான்
நம் நாட்டினரே
சங்க காலம் முதல்
காதலுக்கு முன்னோடிகளாக
இருந்துள்ளார்கள்
இன்னும் இருக்கிறார்கள்
இந்த காதல் வாழ்க்கையை
கல்வி சாத்தியமாக்குகிறது
கலை சிறப்பு செய்கிறது
பயணம் மெருகேற்றுகிறது
பெரும்பாலும்
நல்ல கல்விபடைத்தவரும்
உலக அறிவுகொண்டவருமே
எளிதாக இயல்பாக காதலைப் போற்றி மகிழ்கின்றனர்
நாம் கடந்து வந்த வெற்றிகரமான இந்தியக் காதலர் பலர்
அவர்கள்
ஹார்வர்ட் பல்கலைகழகத்தின் முன்னணி ஆராய்ச்சியாளர்
அந்நிய முதலீடுகளை எதிர்க்கும் புரட்சி இயக்கத்தின் செயலாளர்
அடக்குமுறைகளை சாடும் முற்போக்கு கட்டுரையாளர்
ஐஐடி தில்லியில் பொறியியல் முனைவர்களை உருவாக்கும் பேராசிரியர்
அமெரிக்க மேலவையின் இந்திய வம்சாவளி செனட்டர்
முற்போக்கு இலக்கியங்களைப் படைக்கும் எழுச்சி எழுத்தாளர்
இந்திய சினிமாவை உலக அரங்கில் ஒளிரச் செய்யும் உலகநாயகர்
உலக சினிமாக்களை அலசிப் புரட்டிப்போடும் சினிமா விமர்சகர்
இளைஞர் நலனுக்காக போராடும் மாணவர் அணித் தலைவர்
சிம்பொனி இசையை வெகு எளிதாக இயற்றும் இசை மேதை
பாலியல் சமத்துவத்திற்காக முழங்கும் பெண்ணிய சிந்தனையாளர்
நாசாவின் தலைசிறந்த விஞ்ஞானிகளுள் ஒருவர்
நாட்டுநலப் பணிகளை முன்னின்று செயலாற்றிய திட்டக் குழு ஆணையர்
இவர்கள் அனைவரும் காதலித்து
வாழ்க்கைத் துணையை அமைத்துக்கொண்டவர்களே
அதுவும் அவரவர் சொந்த ஜாதியில்.